இணைப்பு II.

(647 19-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 671-க்கான விடையைக் காண்க.)

இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலை சட்டத்தை அமுல்படுத்தும் அரசு அதிகாரிகளுக்கு தொழிற்சாலை சட்டத்தை கண்டிப்பாக அமுல் நடத்தவும், தொழிற்சாலைகளில் திடீர் ஆய்வு மற்றும் அடிக்கடி ஆய்வு செய்து வருகைப் பதிவேட்டில் (Muster Roll) சிறுவர் உட்பட எல்லா தொழிலாளர்களுடைய பெயரும், விடுபடாமல் பதியப்பட்டுள்ளனவா என்று சரிபார்க்கவும் தொழிலாளர் சட்டங்களின் மூலம் கிடைக்கும் பயன்கள் கிட்டாமல் போகக் கூடிய சாத்தியக் கூறுகளைத் தவிர்க்கவும் நடவடிக்கைகள் எடுக்கும்படி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவர்களுக்கு தொழிற்சாலை சட்டப்படி உள்ள நலன்கள் எல்லாம் அவர்களுக்கு கிடைக்கின்றனவாவென்றும், அவர்கள் குறிப்பிட்ட வேலை நேரத்திற்கு மேல் வேலை செய்யாமல் இருக்கிறார்களா என்றும் சரிபார்க்கிறார்கள். சிறுவர்களின் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் பொதுநல வசதிகள் பற்றிய தொழிற்சாலை சட்ட விதிகளை மீறும் நிர்வாகத்தினர் மீது வழக்குகள் தொடரப்படுகின்றன. நீதிமன்றங்களில் தொடரப்பட்ட வழக்குகள் நடக்கும் போது சட்டவிதிகள் மீறுதல்களையும், அதனால் ஏற்படும் பாதகங்களையும் நடுவர்களுக்கு விளக்கிக் கூறி, நீதிமன்றம் கூடுமானவரை அதிகபட்சத் தண்டனை வழங்க எடுத்துரைக்குமாறு தொழிற்சாலை ஆய்வாளர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

சென்னை தலைமைத் தொழிற்சாலைகள் ஆய்வாளர் அவர்கள் தீப்பெட்டி வர்த்தக குழுவின் உறுப்பினர்களின் கூட்டமொன்றினைக் கூட்டி, தீப்பெட்டித் தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு ஒரு பாதுகாப்பான, சுத்தமான வேலை செய்யும் சூழ்நிலையினை தொழிற்சாலைகளில் ஏற்படுத்துவதற்கான முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். மேலும், 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை வேலைக்கு அமர்த்த வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார். தொழிற்சாலை சட்டத்தையும் அதன் விதிமுறைகளையும் கடுமையாக அமுல் நடத்த, சிவகாசியில் அதிகப்படியாக ஒரு தொழிற்சாலை ஆய்வர் மற்றும் ஒரு உதவி தொழிற்சாலை ஆய்வர் அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் சிவகாசியிலுள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் சிறுவர்களை பரிசோதித்து சான்றிதழ் வழங்க ஒரு தனி மருத்துவ அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்ட அளவில், இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் தலைமையில், அரசு அலுவலர்கள், நிர்வாக பிரதிநிதிகள், தொழிலாளர் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு,

சிவகாசி பகுதியில் தீப்பெட்டி மற்றும் வெடி மருந்து தொழிற் சாலைகளில் பணியாற்றும் சிறுவர்கள் நலன் காக்கவும், அவ்வப் போது ஏற்படும் பிரச்னைகளில் தீர்வு காணவும், பல துறைகளில் பணிகளை இணைத்து நடவடிக்கை எடுக்கவும் அமைக்கப்பட்டு உள்ளது. இந்தக் குழு இருமுறை கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

நகரப் பகுதியில் மட்டும் அதிக அளவில் தீப்பெட்டி மற்றும் வெடி மருந்துத் தொழிற்சாலைகள் அமைப்பதை தவிர்க்கவும், கிராமப் பகுதியில் தொழிலாளர்கள் குடியிருக்கும் பகுதிகளிலேயே தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும், சிறுவர்கள் கிராமப் பகுதி யிலிருந்து நீண்ட தூரம் நகரப் பகுதிக்கு வந்து பணியாற்றி செல்வதை தவிர்க்கவும், சிவகாசி நகர எல்லையிலிருந்து 5 கிலோ மீட்டருக்கு உள்ளாக எந்த புதிய தீப்பெட்டி தொழிற் சாலைகளை தொடங்கவும் அனுமதி வழங்காமலிருக்க அதிகாரி களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது.

அதிகமான அளவில் தீப்பெட்டி மற்றும் வெடி மருந்துத் தொழிற்சாலைகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக தொழிற்சாலை சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டு அதிக அளவில் தொழிலாளர் கள் தொழிலாளர் நல சட்டங்களின் மூலம் பயனடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு, சிறுவர்கள் வேலை ஆகியவை சம்பந்தப்பட்ட தொழிற்சாலை சட்டம் மற்றும் விதிகளை கண்டிப்பான முறையில் அமுல் நடத்த நட வடிக்கை எடுத்ததின் காரணமாக தொழிற்சாலை நிர்வாகிகளின் பேரில் தொடரப்பட்ட வழக்குகள் கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. பதிவு செய்யப்பட்ட தொழிற்சாலைகள், பாதுகாப்பு மற்றும் சிறுவர்கள் வேலை பற்றிய தொழிற்சாலை சட்ட விதிகளை மீறியதற்காக தொடரப்பட்ட வழக்குகள் ஆகியவை பற்றிய புள்ளி விவரங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன :—

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1977 ஆம் ஆண்டிலிருந்து 1982 ஆம் ஆண்டு வரையில் உள்ள தீப்பெட்டி மற்றும் வெடி மருந்துத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மற்றும் அத்தொழிற்சாலை நிர்வாகத்தின் மீது தொடரப்பட்ட வழக்குகளின் விவரம்.

	1977.	1978.	1979.	1980.	1981.	1982.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
தொழிற்சாலைகளின் எண்ணிக்கை :						
தீப்பெட்டித் தொழிற்சாலைகள்		139	157	174	179	186
வெடிமருந்துத் தொழிற்சாலைகள்	..	55	64	77	81	89
வழக்குகளின் எண்ணிக்கை :						
தீப்பெட்டித் தொழிற்சாலைகள் :						
பாதுகாப்பு	8	18	49	43	25	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

சிறுவர் வேலை	..	..	30	37	217	154	96	..
இதரவகை	..	..	111	208	279	258	247	..
மொத்தம்	..	..	149	263	545	455	36	..
வெடிமருந்துத் தொழிற்சாலைகள்:								
பாதுகாப்பு	..	..	1	3	27	91	97	..
சிறுவர் வேலை	..	..	1	6	64	33	31	..
இதரவகை	..	..	68	62	74	272	257	..
மொத்தம்	..	..	70	71	165	396	385	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS